முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி புரட்டாசி மாதம் 28ம் திகதி முதல் ஐப்பசி மாதம் 4ம் தேதி வரை**

**அக்டோபர் 14ம் திகதி முதல் அக்டோபர் 21ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **உலக நாடுகளே வசமாகும் வண்ணம்**
**உண்மை இறைதத்துவம் மிக்க**
**பலம் நிறைந்த பாரதமே**
**பண்பான மக்களை பரோபகாரமுடைய**

**2.** **உடைய நல் ஞானவான்களை**
**உயர் சக்தியாக கொண்ட தமிழகமே**
**தடையற சுப்பிரமணியர் யானும்**
**தமிழகம் இந்தியாவில் இந்த வார**

**3.** **வார நிகழ்வாக எதிர்கால பலனை**
**விளம்பி நங்கை திங்கள் எழுநான்கு திகதி மேல்**
**கூறவே துலை திங்கள் சதுர் திகதி வரை**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள் 14.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 4ம் நாள் 21.10.2018, ஞாயிறு முடிய)**
**குறிப்பாக நடக்கும் நிகழ்வுரைப்பேன்**

**3.** **உரைக்கவே தமிழக எல்லை**
**உயர்மழை கண்டு நீர்வளம்**
**குறைவில்லா பெருக்கமுறும்**
**கூறினாலும் பெருநகரங்களில் பலவாற்**

**4.** **பலவாற் முடக்கம் சேதாரம்**
**பணவர்த்தகம் பரிமாற்றமென**
**சலனமுறும் இயற்கை இடரால்**
**சாமானியர் வாழ்வும் பாதிக்கும்**

**5.** **பாதிக்கும் இந்தியாவின் பல பகுதி**
**பயிர்வளம் குன்ற மழைவளம்**
**பாதிப்பு தரும் வண்ணம் பெருகும்**
**பகை நாடுகள் வழியான தாக்கமும்**

**6.** **தாக்கமுடன் வர்த்த தாக்கம்**
**தவிர்க்க முடியா கச்சா விலை**
**ஆக்கமிலா வளரும் உயரும்**
**அரசுக்கு ஆளுமைக்கு ஆபத்தாக மாறும்**

**7.** **மாறுதலைச் செய்ய வந்த அரசும்**
**மலுப்பலாக சேவை தொடரும்**
**ஆறுதல் எனும் திட்டங்களையெல்லாம்**
**ஆற்றலில்லா சிலமுடை காணும்**

8. காணுமே வரிச்சுமை அல்லல்
கட்டாயம் மத்திய மாநிலம் வகை
ஞானமிலா வளர்ச்சி முடங்கும்
நம்பகமிலா மக்களிடை நிதி நிறுவனம் முடங்கும்

9. முடங்கும் நிலை விலகி முழுமைபட
மண்ணுலகில் ஞானபலம்பெற
சுடரான ஆறுமுகன் வழிபாட்டை
சுத்தநெறி காட்டும் அரங்கன் மூலம்

10. மூலமதில் உலகோர் அணுகி
மக்களெல்லாம் பதவியாளரெல்லாம்
காலமதை வெல்ல ஏற்றமுற
கட்டாயம் அரங்கன் ஞானவழிக்கு வாரீர்

11. வருகவே இந்தியா தமிழகம்
வல்லமைபட உயர்நிலை அடைந்து
முருகப்பெருமான் ஆளுமைக்கும்
முழுமை ஞான ஆட்சிக்கும் மாற்றம் பெறும் வார ஆசி முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**இந்தியா தமிழகம் தன்னில் விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள் 14.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 4ம் நாள் 21.10.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

உலக நாடுகளெல்லாம் தன்வசமாகும் வண்ணம் உண்மையான இறைதத்துவம் மிகுந்ததும் ஆன்மபலம் நிறைந்ததும் உள்ள பாரத தேசத்திலும் பண்பான மக்களையும் பரோபகாரம் கொண்ட, உடைய நல்ல ஞானவான்களை கொண்டுமே உயர் ஞானசக்தியாக விளங்குகின்ற தமிழக தேசத்திலும் விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள் 14.10.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 4ம் நாள் 21.10.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை உலக நலம் கருதி வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இந்த வாரத்தினில் தமிழகம் முழுதும் மழை பொழிந்து நீர்வளம் பெருக்கம் அடைந்து நிலத்தடி நீர்மட்டம் உயர்வடையும். ஆனாலும் பெருநகரங்களில் மழை அதிகமாக பெய்து சேதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனால் பெருநகர செயல்பாடுகள் முடக்கம் ஏற்படும் நிலையும் உண்டாகலாம்.

இயற்கையின் சீற்றத்தினால் சேதங்கள் உண்டாகி பணவர்த்தகமும் பரிமாற்றங்களும் தடுமாற்றம் அடையும். சாமானிய மக்களின் வாழ்க்கை பாதிப்படையும்.

இந்தியாவின் பல பகுதிகளில் காலம் தவறிய மழையும், மழை பொழிவு அதிகமாகவும் பெய்து விளை பயிர் நாசம் ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகிடும். பகை நாடுகளின் மூலமாக வருகின்ற தாக்கமும் இந்தியாவினை பாதிக்கும். பகை நாடுகளின் தாக்கம் ஒருபுறம் இருக்க வர்த்தக தாக்குதல்களையும் இந்த வாரம் இந்திய நாடு சந்திக்க வேண்டி வரும். கச்சா எண்ணெய் விலை தவிர்க்க முடியாமல் விலை ஏற்றம் அடையும். எண்ணெய் விலை உயர்வானது ஆளும் அரசிற்கு ஆபத்தாக முடிவுறும்.

ஆனாலும் ஆளும் அரசும் மாற்றம் செய்ய வந்த அரசாக தம்மை புறத்தில் காண்பித்து மழுப்பலாக பிரச்சனைகளை சமாளித்து ஆட்சியை தொடரும். இந்தவித எரிபொருள் பிரச்சனைகளை சமாளிக்க ஆளும் அரசு மக்களை ஆறுதல் செய்கிறோம் என்பதாக சில திட்டங்களை அறிவிக்கும். ஆனாலும் ஆற்றலில்லா அரசின் செயல்பாடுகளால் அத்திட்டங்கள் எல்லாம் முடக்கம் அடையும்.

நாட்டினில் நிதிநெருக்கடியை சமாளிக்க முடியாமல் மக்களிடம் மீண்டும் மீண்டும் அரசு வரிவிதித்து மக்களை மேலும் வரிச்சுமைக்கு ஆளாக்கும். அதனால் மத்திய மாநில அரசுகளின் வளர்ச்சிகள் முடக்கம் அடையும்.

மக்களின் நம்பிக்கையை பெற முடியாமல் நிதிநிறுவனங்கள் தடுமாறும். போலி நிதிநிறுவனங்கள் முடங்கும் நிலைகள் உண்டாகும். நிதிநிறுவனங்களின் முடக்கம் விலகி முழுமைபட மண்ணுலகில் ஞானபலம் பெற்றிட சுடர்வடிவான ஜோதி சொரூபன் முருகப்பெருமான் வழிபாட்டினை தூய ஞானநெறி மூலம் மக்களுக்கு வழிகாட்டும் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக உலக மக்களெல்லாம் முருகப்பெருமானையும் ஞானகுரு அரங்கனையும் பணிந்து வணங்கி ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளுங்கள்.

பதவியில் உள்ளவர்கள் காலத்தை வெல்ல அவரவரின் பதவிகளில் உயர்நிலையை அடைந்திட அவசியம் அரங்கன் காட்டும் தூய ஞானநெறிக்கு வருகை தர வேண்டும்.

பதவி வகிப்போர் எல்லாம் தன்னலமற்று பொதுநலத்துடன் நடந்து உண்மை ஞானவழியினில் சென்று உண்மையுடன் நடந்து சேவைகள் செய்து வரவர, இந்தியாவும் தமிழகமும் வல்லமையுடன் உயர்வான நிலையை அடைந்து முருகப்பெருமானின் ஞானஆட்சிக்கும் முருகப்பெருமானின் ஆளுமைக்கும் இந்த உலகம் மாற்றமடைந்து இந்த கலியுகம் ஞானயுகமாக மாற்றம் அடையும் என மகான் சுப்பிரமணியர் தமது வார ஆசி நூல் மூலம் உரைக்கின்றார்.

–சுபம்–